## *DEPOSITION OF WITNESS*
## *(Chapter XXV BNSS)*

## *IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I COURT Mannargudi*
## *CC.No. 199/2022 – P.W.7/LW10*

| | |
|---|---|
| *Name* | ராஜ்மோகன் உதவி ஆய்வாளர் (ஓய்வு) |
| *Father/Husband's Name* | |
| *Village* | |
| *Taluk* | |
| *Religion* | |
| *Age* | *61* |

*1 வது எதிரி ஆஜர் இல்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டுள்ளது. 2,3 எதிரிகள் ஆஜர்.*

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day 18.05.2026*

*அரசு தரப்பில் முதல் விசாரணை*

1. நான் தஞ்சாவூர் மாவட்டம், திருக்காட்டுப்பள்ளி காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து தற்சமயம் பணி ஓய்வு பெற்றுவிட்டேன்.

கடந்த 26.07.2019 ம் தேதியன்று மாவட்ட அரசு தலைமை மருத்துவமனை, மன்னார்குடியில் இருந்து வரப்பெற்ற தகவலை பெற்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த பழனிச்சாமி மகன் செந்தில் என்பவரை விசாரித்து புகார் வாக்குமூலம் பெற்று வந்து 11.30 மணிக்கு நிலைய குற்ற எண்.134/2019 இதச பிரிவுகள் 341, 294(பி),332, 506(2) ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **மேற்படி முதல் தகவல் அறிக்கை அசா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்ட நான் அன்றையதினம் சம்பவ இடம் சென்று சாட்சிகள் அன்பழகன் மற்றும் சின்னதம்பி ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். (**பார்வை மகசர மற்றும் வரைபடம் அ.சா.ஆ.4 மற்றும் 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). பட்டியல் சாட்சிகள் 1 முதல் 8 வரையிலானவர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்தேன்.

சம்பவம் உண்மை என தெரியவந்ததும் எதிரியை தேடிய போது அன்றையதினம் 14.00 மணிக்கு முக்குளம் சாத்தனூர் சாவடி அருகே நின்று கொண்டிருந்தவரை குற்ற காரணம் கூறி கைது செய்து நீதிமன்ற அடைப்புக்காவலுக்கு உட்படுத்தினேன். இச்சம்பவத்தில் காயம் அடைந்த செந்தில் என்பவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் விஜேந்திரன் என்பவரை விசாரித்து விபத்து பதிவேடுடன் இணைந்த காயச்சான்று பெற்று தாக்கல் செய்தேன். அது ஏற்கெனவே அசா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

இத்துடன் எனது விசாரணையை முடித்து எதிரியின் செய்கையானது 341, 294(பி),332, 506(2) ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் என குற்ற இறுதியறிக்கை 09.09.2019ம் தேதி தாக்கல் செய்தேன்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

முதல் தகவல் அறிக்கையில் மணல் அள்ளுவதாக வந்த தகவலின் அடிப்படையில் சென்றோம் என்றால் சரிதான். புகார்தாரர் கிராம உதவியாளர் என்றால் சரிதான். மணல் அள்ளுவதாக சம்பந்தமாக சம்பவ இடத்திற்கு செல்வதற்கு மேலதிகாரியிடம் எழுத்துமூலமான ஆணை எதுவும் பெறவில்லை என்றால் சரிதான். வாய்மொழியான உத்தரவு தான். சம்பவ இடத்தில் ஆறு, வாய்கால் எதுவும் இல்லை என்றால் சரிதான். டிராக்டர் போன தடம் இருந்தது என்றால் சரிதான். அந்த டிராக்டர் யாருடையது என்று எனது விசாரணையில் தெரிந்து கொள்ளவில்லை என்றால் சரிதான்.

போர்செட் ஓனர் திருஞானம் என்பவரை விசாரித்தேனா என்றால் விசாரிக்கவில்லை. புகார் மற்றும் 161 வாக்குமூலத்தில் 1 வது எதிரி வினோத் கழுத்து பகுதியில் கட்டையால் அடித்ததாக இல்லை என்றால் சரிதான். மண் அள்ளும் உபகரணங்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை என்றால் இல்லை. எனது விசாரணையின் படி அசா.1 செந்தில் மட்டும் தான் சம்பவ இடத்திற்கு சென்றதாகவும், மற்ற சாட்சிகள் காரிலே இருந்ததாகவும் உள்ளது என்றால் சரிதான்.

எதிரிகள் வந்த இருச்சக்கர வாகனத்தில் வந்து தாக்கியதாக இருந்தபோதிலும், வாகனம் யாருடையது என்றும், அந்த வாகனத்தை கைப்பற்றவில்லை என்றால் சரிதரான். சம்பவ இடத்திற்கும், வடுவூர் காவல் நிலையத்திற்கும் ஒரு 7,8 கிமீ இருக்கும் என்றால் சரிதான். 26.06.2019 இரவு 11.00 மணிக்கு சம்பவ நடந்து 27.06.2019ம் தேதி காலை 11.00 மணிக்கு வாக்குமூலம் பெறும் வரை எந்தவொரு தகவலும் பெறப்படவில்லை என்றால் 27.06.2019ம் தேதி அதிகாலை தகவல்

கிடைத்தது. 26.06.2019 ம் தேதி இரவு 11.00 மணிக்கு சம்பவம் நடந்த பிறகு தாசில்தாரால் புகார் கொடுக்கப்பட்டு அது மறைக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

இந்த வழக்கு தொடர்பாக எந்தவிதமான தடயபொருளும் எதுவும் கைப்பற்றபடவில்லை என்றால் சரிதான். விபத்து பதிவேட்டினை பார்த்து தான் இறுதியறிக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். விபத்து பதிவேட்டில் சம்பவ இடம், சம்பவ தேதி, நேரம் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. விபத்து பதிவேட்டில் சம்பவ இடம் திருஞானம் போர் செட்டுக்கு அருகில் நடந்நதாக இல்லை என்றால் சரிதான். நான் பார்க்ககூடிய விபத்து பதிவேட்டில் 26.06.2019 ம் தேதியன்று சம்பவ நடந்ததாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. 26.06.2019 ம் தேதி தான் குறிப்பிடப்பட்டுள்ளது.

விபத்து பதிவேட்டினை படித்து பார்ககாமல் தவறான குற்ற பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 26.06.2019 ம் தேதி குற்றப்பத்திரிக்கையின் படி இதுபோன்ற சம்பவம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. எதிரிகள் அசா.1 ஐ தாக்கி எந்தவொரு காயமும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. நான் சம்பவ இடத்திற்கு செல்லாமல் சம்பவ இட சாட்சிகளை விசாரிக்காமல் யாரோ சொன்ன தவறாக சொன்ன தகவலின் படி எதிரிகளை தொடர்புபடுத்தி அசா.1 அரசு அதிகாரி என்பதால் அவருக்கு ஆதரவாக செயல்பட்டுள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகள் மீது தவறான இறுதியறிக்கை தாக்கல் செய்துவிட்டேன் என்றால் சரியல்ல.

Sd/--J. Tamizhmurugan,
Judicial Magistrate No.I,
Mannargudi.